தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
நிர்வாகக் கிளை

144, அண்ணா சாலை,
சென்னை – 600 002.

<u>குறிப்பாணை எண்.14065/231/ஜி3/ஜி32/2013-11, நாள் 18.03.2013.</u>

பொருள் : நிர்வாகம் – மூன்றாம் நிலைப்பணி – தொழில்நுட்ப உதவியாளர்/ மின்னியல் மற்றும் இயந்திரவியல் – உள்முகத்தேர்வின் மூலம் தேர்வு செய்யப்பட்டு பணியில் சேராமை குறித்து அறிவுரை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. த.பொ./ பணி குறிப்பாணை எண்.14065/231/ ஜி3/ஜி32/2013-1, நாள் 16.02.2013.
2. த.பொ./ பணி குறிப்பாணை எண்.14354/232/ ஜி3/ஜி32/2013-1, நாள் 18.02.2013.

------

மேலே காணும் பார்வை 1-ன்படி 186 பணியாளர்களுக்கு உள்முகத் தேர்வு மூலம் தொழில்நுட்ப உதவியாளர்/ மின்னியல் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டது. பார்வை 2-ன்படி 38 பணியாளர்களுக்கு உள்முகத் தேர்வு மூலம் தொழில்நுட்ப உதவியாளர்/ இயந்திரவியல் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டது.

தாங்கள் மேற்கண்ட உத்தரவினையும், நியமன உத்தரவினையும் பெற்றிருந்தும் இதுநாள் வரை தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் பணியேற்பு செய்யவில்லை என தெரிய வருகிறது. இக்குறிப்பாணை கிடைக்கப் பெற்ற ஒரு வார காலத்திற்குள் தாங்கள் பணியேற்பு செய்யவில்லையெனில் தங்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்வதோடு, மேலதிகாரிகளின் உத்தரவினை கீழ்படியாத காரணத்திற்காக தற்காலிக பணியிடை நீக்கம் செய்திடவும் நேரிடும் என்பதை அறியவும்.

(தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களின் உத்தரவின்படி)

தலைமை பொறியாளர்/ பணியமைப்பு

பெறுநர்:-
திரு.
மேற்பார்வை பொறியாளர்/ மூலமாக.

(த.பி.பா.)

நகல் : மேற்பார்வை பொறியாளர்/

தாங்கள் மேற்கண்ட குறிப்பாணையை உரியவரிடம் சார்பு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேற்கண்ட பணியாளர் பணியேற்பு செய்திருப்பின் இக்குறிப்பாணையை இவ்வலுவலகத்திற்கு திருப்பி அனுப்பக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. ஒரு வார கால அவகாசத்திற்கு பின்னும் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பணியாளர் பணியேற்பு செய்யவில்லையெனில், அதன் விவரத்தினை உடன் இவ்வலுவலகத்திற்கு மேல் நடவடிக்கை மேற்கொண்டிட, தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகல் : தலைமை பொறியாளர்/

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்களின் உத்தரவின் பேரில் மேற்கண்ட அறிவுறுத்தல் வழங்கப்படுகிறது. தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள மேற்பார்வை பொறியாளர்களுக்கு உரிய அறிவுரை வழங்கிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

D:/popanel/g3/memo-tam